திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னையிலிருக்கும் இந்த ஃபாரன்ஸிக் லாபரடரிக்குப் புதிதாக அதிகப் பணம் கொடுத்திருக்கிறார்களே அதனுடைய செயலாற்றும் முறை எம்முறையில் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நன்முறையில் இருக்கிறது.

Posts of Deputy Inspector-General of Police

* 545 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of posts of Deputy Inspector-General of Police have been created in this State during 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உணவுப் பிரிவு-குற்றப் புலனாய்வுத் துறைக்கு காவல் துறை டெப்யுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி ஒன்றும், தமிழ்நாடு காவலர் ஆணைக்குழு (போலீஸ் கமிஷன்) உறுப்பினர்-செயலாளர் பதவிக்கு டெப்யுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி ஒன்றும் 1969-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன.

திரு. எ. சுவாமிதாஸ்: இந்த நியமனங்களுக்காக ஆண்டுதோறும் அரசாங்க நிதியிலிருந்து எவ்வளவு செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாதமொன்றுக்கு டி.ஐ.ஜி.-க்கு ரூ. 1,600 முதல் ரூ. 2,000 வரை சம்பளமாக செலவாகிறது.

காவல் துறை அலுவலர்கள் பயிற்சிக் கல்லூரி

* 546 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியை சென்னைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தற்போது அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரிக்குப் பயிற்சிக்காகப் போகக் கூடியவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாத நிலை இருப்பதோடு, அவர்களுடைய உணவுக்குக் கூட கஷ்டமாக இருக்கிறது என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அதற்கு அரசு என்ன பரிகாரம் காண முயற்சிக்கிறது?